**2025 ஆம் ஆண்டு அக்டோபர் 31–ம்** தேதி கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடலூர், நீலகிரி மாவட்டம், **அசல் வழக்கு எண்.9/2019,** 1973ஆம் ஆண்டு ஆணையுறுதி ஆவணச் சட்டம் 10வது விதியின் படி திருமதி.A.மகேஸ்வரி, தலைமை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **திரு.அகமது குட்டி** (PW–1) | தாலூக்கா | : ஏரநாடு |
| தந்தை பெயர் | : திரு.கோயிகுட்டி | கிராமம் | : எடவன்னா |
| சமயம் | : – | மாவட்டம் | : மலப்புரம் |
| தொழில் | : | வயது | : 52/2025 |

---

**31.10.2025**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

(சாட்சி மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டார்.)

**<u>வா.சா.1–ன் மறு விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனது தரப்பில் கதவு எண்.12/439A வீட்டிற்கான வீட்டு வரி ரசீதுகள்(எண்ணிக்கை 3) ஆவணம் வழக்குரையுடன் தாக்கல் செய்திருந்தேன். **ரசீதுகள் (எண்ணிக்கை 3) வா.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் கிரயம் பெற்ற சொத்தில் இருக்கும் வீட்டின் கதிவு எண்.12/439A1A என்று சொன்னால் சரியல்ல. கதவு எண்.12/439A ஆகும். வா.சா.ஆ.11–ஆவது சான்றாவணத்தில் கதவு எண்.12/439A1A என்பதில் 1A என்பது அழிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற வீட்டின் கதவு எண்.12/439A1A என்றும், வழக்கிற்காக வா.சா.ஆ.11 ஆவணத்தில் கதவு எண்னை திருத்தியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ராஜா மற்றும் கார்த்திகாயினி ஆகியோர் கதவு எண்.12/439A–ல் குடியிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள ஆதார் நகலில் கதவு எண்.17/146 என்று

MURUGESAN P

Digitally signed by MURUGESAN P
Date: 2025.10.31 17:48:45 +0530

குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரிதான். கார்த்திகாயினி, ராஜாவிற்கும் கதவு எண்.12/439A–க்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கதவு எண்.12/439B வீட்டை சுற்றி வேலி அடைத்ததாக எனக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டு, அந்த குற்ற வழக்கு கூடலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். போலி ஆவணத்தை உருவாக்கி வனத்துறைக்கு சொந்தமான கட்டிடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தேன் என்றும், அதனால் தான் எனக்கு எதிராக குற்ற வழக்கும் பதிவு செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

MURUGESAN P

Digitally signed by MURUGESAN P
Date: 2025.10.31 17:48:49 +0530